**மொரவெ பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்ககை முறையே 2019 மே 29, 2019 மே 31 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------------------

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சேருவில பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 75,000 பெறுமதியான வாசிகசாலை புத்தகங்கள் | கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2019 ஆம் வருடத்திலே மூலதனமாக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | சபைக்கு உரிய ரூபா 6,500,000 நிலையான வைப்புக்கள் காணப்பட்ட போதும் அவை கணக்குகளில் ரூபா 6,481,927 என கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சரியான நிலையான வைப்பின் பெறுமதியை குறிப்பிட வேண்டும். | கணக்கிடும் போது விடுபட்டுள்ளது. 2019 ஆம் வருடத்திலே தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | கடை வாடகை பேரேட்டில் பெறப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 71,592 ஆக குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது ரூபா 112,466 என இறுதி கணக்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. | சரியான கடை வாடகை பேரேடுகளில் பேணப்பட வேண்டும். | 2019 ஆம் வருட இறுதி கணக்குகளுக்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஈ) | JCB இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்கான வட்டி ரூபா 384,703 கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டித்தொகை இறுதிக் கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட வேண்டும். | கணக்கீடு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் இணக்கஞ் செய்யப்படாதவை அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய ஊழியர் கடன், கடன் ஏட்டின்படி ரூபா 1,150,574 ஆக இருந்தாலும், ஐந்தொகையின் படி அது ரூபா 878,607 ஆக இருந்ததுடன் ரூபா 271,940 வேறுபாடொன்று காட்டப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்குக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இதற்கு பல வருடங்களுக்கு முன்பு எங்களுடைய காரியாலயத்திலிருந்து இட மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களினால் முறையாக கடன் மீளச் செலுத்தாததனால் இந்த நிலைமை உருவாகியுள்ளது. பல வருடங்களாக இந்த கடனை மீண்டும் செலுத்தும்படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டாலும் இதுவரை அந்த கடன் மீள் செலுத்தப்படவில்லை. அதனால் கடன் செலுத்தப்படாவிட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 1..3.3 தொங்கற் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற தொங்கற் கணக்கின் மீதி ரூபா 7,864,759 தொடர்பாக தேடிப்பார்த்து கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | அது தொடர்பாக தேடிப்பார்த்து கணக்குகளுக்கு தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு தொங்கற் கணக்குகள் தீர்வு காணப்பட வேண்டும். | பல வருடங்களுக்கு முன்பு இறுதி கணக்குகள் தயார் படுத்தும் போது இடம் பெற்ற பிழையொன்றின் காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது. 2019 ஆம் வருடத்திற்குள் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். |

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் இல்லாதிருந்தமை

(அ) தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| i. ரூபா 1,164,852 பெறுமதியான இரண்டு கணக்கு விடயங்களுக்குரிய சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது அது திருப்திகரமாக அவதானிக்க முடியாதுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்குகளின் மீதியை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய தொகையை விரைவாக பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. |

## 1.4 இணங்காமைகள்

----------------------------

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i. நிதிப்பிரமாணம் 454 | விசேட பண்டகசாலை சட்டம் விதிக்கப்படாத அனைத்து திணைக்களங்களின் உப காரியாரயங்களிலும் பொருட் பதிவேட்டுப் புத்தகமொன்று காணப்பட வேண்டும். சபை அவ்வாறான பொருட் பதிவேட்டுப் புத்தகமொன்றை பேணியிருந்தாலும் அது சரியாக நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை | பொருட் பதிவேட்டுப்புத்தகம் சரியாக நாளதுவரையாக்கப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1988 ஆண்டுடின் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) 13 ஆவது விதி | வருடம் ஆரம்பிப்பதற்கு முன் பாதீட்டின் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர், சான்றுறுதிப் படுத்தப்பட்ட பாதீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தீயோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ii) 217 ஆவது விதி | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும் | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (iii) 17 ஆவது விதி | பற்றுச்சீட்டு தொடர்பாக உரிய மாதிரியில் காணப்படுகின்ற உதவி ஆவணப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | உதவி ஆவண பதிவேடொன்ற பேணப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தீயோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (iv) 76 ஆவது விதி | சபையினால் வாடகைக்கு வழங்கப்படுகின்ற கடைகள் சம்பந்தமாக வாடகைப் பேரேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வாடகை பேரேடொன்ற பேணப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

------------------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 324,795 ஆக இருந்ததுடன், இதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 2,657,153 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

---------------------------------

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் முன்னைய வருடத்திற்குரிய சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 62 | - | - | - | 112 | 8 | - | 70 |
| வாடகை | 4,705 | 2,687 | 2,615 | 72 | 5,360 | 2,408 | 2,183 | 225 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 251 | 219 | 219 | - | 50 | 166 | 166 | - |
| வேறு வருமானங்கள் | 3,005 | 1,494 | 1,494 | - | 3,571 | 3,569 | 3,569 | - |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது சபைக்கு அறவிட்டுக்கொள்வதற்கு காணப்படுகின்ற நீதிமன்ற தண்டப்பணத்தை இதுவரை | நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 செயலாற்றுகை

------------------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பண்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் சம்பந்தமான காரணங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய விடயங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) உப விதிகள்**

---------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28ஐ நிறைவேற்றுவதற்காக உப விதிகள் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்தும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் உப வழிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

## (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் வருடத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயார்படுத்தப் பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு அதன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

## (இ) கைவிடப்பட்ட வேலைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் பிரதேச சபையை மேம்படுத்தும் தேசிய வேலைத்திட்டம் - 2017 இன் கீழ் மஹதிவுல்வெவ பிரதேசத்தின் மக்களின் தேவையாகவுள்ள வாராந்த சந்தையொன்றை நிர்மாணிப்பதற்கு 2017 ஒக்டோபர் 06 ஆம் திகதி சமூக நிறுவனமொன்றிற்கு ரூபா 1,000,000 பெறுமதிக்கு ஒப்படைக்கப்பட்டது. சமூக நிறுவனத்தினால் மூலப்பொருட்களின் விலை அதிகமென்று உரிய நிர்மாணப்பணியை மேற்கொள்ள முடியாதென கூறினாலும் அதை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் முன்வைக்கப்படவில்லை. அத்தோடு சபையினால் மீண்டும் இந்த ஒப்பந்தத்தை | தேவையைக் கருத்திற் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

வெறு நிறுவனமொன்றிற்கு அல்லது ஒப்பந்தகாரரொருவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. இதனால் இந்த பிரதேச மக்களின் தேவையாகவுள்ள வாராந்த சந்தை நிர்மானிக்கும் பணிகள் 2019 ஏப்ரல் 08 ஆம் திகதியாகியும் நிறைவேற்றப்படவில்லை.

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கமுடைய அதிகாரச் சட்டங்களின் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கமுடைய தேசிய சுற்றாடல் அதிகரச் சட்டத்தின் 23 ''அ'' பிரிவின் முறைமைகளின் பிரகாரம் சுற்றாடலுக்கு குந்தகம் விளைவிக்கும் நெல் ஆலை பலகைத் தொழில், கராஜ் மற்றும் சீமேந்துடன் தொடர்புடைய உற்பத்தி நிறுவனங்கள் ஆகிய வியாபாரங்களை நடைமுறைப்படுத்தும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டுமென்றாலும் சபையின் அதிகாரப்பிரதேசத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும் அது போன்ற 16 வியாபார முயற்சிகள் அந்த அனுமதித் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாமல் தொழிலை மேற்கொண்டிருக்கின்றனர். இது சம்பந்தமாக ஏற்படக்கூடிய சுற்றாடல் | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய தொழில் முயற்சிகளுக்காக அனுமதிப்பத்திரம் பெறப்பட்டதன் பின்னரே வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் வருடத்திற்குள் இப்பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. |

பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு சபையினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை

## 3.2 முகாமைத்துவ திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | JCB இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக தேசிய கடன் மற்றும் அபிவி ருத்தி நிதியத்தினால் மாதாந்தம் 60 தடவைகளில் செலுத்தி முடிப்பதற்கு 2013 மே மாதம் பெறப்பட்ட ரூபா 9,520,000 கடன் தொகை முறையினூடாக சபையினால் செலுத்தப்பட்டிருந்தால் 2018 மே மாதமாகும் போது அந்த கடன் தொகையை செலுத்தி முடித்திருக்க முடியுமாயிருந்தது. இருந்தாலும் சபை 2016 மே மாதத்திலிருந்து கொடுப்பனவை மேற்கொண்டிருக்கவில்லை. இதனால் ரூபா 4,523,342 கொடுப்பனவு பணம் மற்றும் வட்டிப்பணம் சபைக்கு செலுத்துவதற்கு மீதமாக காணப்படுகின்றது. | கடன் கொடுப்பனவு மற்றும் வட்டி என்பவற்றை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சபையின் வருமான நிலை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் சரியான காலத்தில் கடன் கொடுப்பனவை செலுத்த தவறியதன் காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது. இப்போது நிலுவை கடன் கொடுப்பனவுவில் ஒரு பகுதி செலுத்தப்பட்டிருப்பதுடன், எதிர்காலத்தில் அதை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) அதிமேதகு ஜனாதிபதியினால் ரூபா 10,000,000 தொகையொன்று 2018 ஆம் வருடத்திலே சபைக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட தொகையிலிருந்து சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் ரூபா 100,000 வீதம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்காக வழங்கப்பட்டாலும் அதில் ஒரு அங்கத்தவர் ரூபா 59,975 பெறுமதியான பொருட்கள் அவருடைய காரியாலய பாவனைக்காக கொள்வனவு செய்திருந்தார். மேலும் இந்த பணத்தொகைக்காக சபையினால் அனுமதிக்கப்பட்ட நிலையான திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | வழங்கப்பட்ட பணத்தொகை பயன்தரு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் அனுமதிக்கப்பட்ட திட்டமொன்றிற்கு அமைவாக செலவு மேற்கொள்ளப்பட வேண்டும். | அப்பொருட்களை மீண்டும் பிரதேச சபைக்கு ஒப்படைக்குமாறு உரிய அங்கத்தவருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றை எதிர்காலத்தில் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நூல்நிலைய அதிபதி, மின்சார தொழில்நுட்ப உத்தியோகத்தர் முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு 05 | அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | முகாமைத்துவ உதவியாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நூல்நிலைய அதிபதி ஆகிய பதவிகளுக்காக எதிர்காலத்தில் இடம்பெறுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கு அதிகமான காலத்திலிருந்து காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | | ஆட்சேர்ப்புக்களில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதாக பிரதி பிரதான செயலாளரினால் (நிர்வாகம்) அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சார தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கும் நடவடிக்கை இப்போது இடம்பெற்றுக்கொண்டிருப்பதுடன் மிக விரைவில் நியமனம் வழங்குவதற்கு உள்ளது. |
| (ஆ) | சேவையை விட்டுச்சென்ற நான்கு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 100,45 ஐ நிர்வாக கோவையின் XXIV ஆவது அத்தியாயத்தில் 4 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் பிரகாரம் 2019 ஏப்ரல் 08 ஆம் திகதியாகியும் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அக்கடனை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய கடன் தொகையை செலுத்துமாறு பல தடவைகள் கடனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டும் கொடுப்பனவை மேற்கொள்ளவில்லை. அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.4 பெறுகைகள்

---------------------

### 3.4.1 பெறுகைகள் திட்டம்

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 மார்ச் 24 ஆம் திகதியுடைய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 128 ஆம் இலக்கத்தின் படி பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் அப்படி இடம் பெற்றிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

### 3.4.2 பல்விடல் கட்டிடம் அபிவிருத்தி செய்தல் - இலக்கம் 01

-----------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நிர்மானிக்கப்பட்ட இந்த கட்டிடத்திற்கான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கமுடைய நகர அபிவிருத்தி அதிகாரச்சபை சட்டம் மற்றும் 392/9 ஆம் இலக்க 1986 மார்ச் 10 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் கட்டிட பிரமாணத்தின் பிரகாரம் அனுமதி பெற்றிருக்கவில்லை. | அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முதல் மாடிக்கு கொங்கிரீட் இடுதல் சுவருக்கு சாந்து பூசுதல் மற்றும் லின்டன் சாந்து பூசுதல் மற்றும் உள் சுவருக்கு நிறப்பூச்சு பூசுவதற்காக (C4,C6,C7,11) ரூபா 194,999 செலுத்தப்பட வேண்டியிருந்தும் சபையினால் அந்த விடயத்திற்காக ரூபா 270,374 செலுத்துவதற்காக பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அதன்படி சபையினால் ரூபா 75,375 தொகை மேலதிகமாக செலுத்துவதற்காக விலை பட்டியல் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (இ) | சுன சமூக நிலையத்தினால் ரூபா 114,075 பெறுமதியான 04 வகையான பொருட்கள் 2018 ஏப்ரல் 11 ஆம் திகதியாகும் போதும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லையென் பதுடன் சபையினால் அந்த பொருட்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவிற்காக விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சனசமூக நிறுவனத்தினால் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஈ) | ஒப்பந்த வேலை நடவடிக்கைகள் 2017 நவம்பர் 06 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டுமெனினும் ஒப்பந்தகாரரினால் 2018 ஏப்ரல் | ஊரிய வேலைகள் முடிவடைதலுக்கான வெற்றித்தன்மையை உறுதிப்படுத்தும் போது பொறுப்பான | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை வழங்கப்படவில்லை |

| | |
|---|---|
| 11 ஆம் திகதியிலும் அந்த வேலைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. எப்படியாயினும் சபையினால் மேற்கூறப்பட்ட வேலை திருப்திகரமாக முடிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டு வேலை முடிக்கப்பட்ட சான்றிதழ் 2017 திசெம்பர் 26 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. | அதிகாரிகள் அவற்றை சரி செய்வதற்கு பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதுடன் உயர் கட்டுப்பாட்டு அதிகாரிகள் அவற்றை மேற்பார்வை செய்ய வேண்டும். |

### 3.4.3 பல்நோக்கு கட்டிடம் நிர்மானித்தல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபையினால் புரநெகும செயற்திட்டத்தின் கீழ் பல்நோக்கு கட்டிட நிர்மானித்தலுக்காக 2016 ஏப்ரல் 11 ஆம் திகதி ரூபா 8,401,836 பெறுமதியான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் வேலைகள் 2016 செப்தெம்பர் 12 ஆம் திகதியாகும் போது முடிக்கப்பட வேண்டும். இருந்த போதும் 2016 நவம்பர் 30 ஆம் திகதியிலேயே முடிக்கப்பட்டிருந்தது. அதன்படி அறவிடப்பட வேண்டிய தாமதக்கட்டணமான ரூபா 327,617 பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இதற்கு முன்னைய வருடம் குறிப்பிடப்பட்டாலும் இதுவரையும் | தாமதக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் வருடத்திற்குள் அந்த தாமதக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

அவற்றை அறவிட்டிருக்கவில்லை.

### 3.4.4 மயிலகுடா வாவியின் பிரதான பாதையை கொங்கிரீட் இடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புரநெகும செயற்திட்டத்தின் கீழ் மயிலகுடா வாவியின் பிரதான பாதையை கொங்கிரிட் இடுதலின் இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 4,000,280 பெறுமதியான ஒப்பந்தமொன்று 2016 ஜுலை 08 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தத்தில் வேலைகள் அனைத்தும் 2016 ஒக்டோபர் 08 ஆம் திகதியாகும் போது முடிக்கப்பட வேண்டும். இருந்தாலும் 2017 ஜனவரி 01 ஆம் திகதியிலேயே முடிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தனி 6.4 பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 168,012 ஆகும். இருந்தாலும் 60,004 குறைக்கப்பட்டிருந்ததுடன், குறைவாக அறவிடப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா 108,008 ஆக இருந்ததாக இதற்கு முந்திய வருடம் குறிப்பிடப்பட்டாலும் இது வரையும் அவற்றை அறவிட்டுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | தாமதக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் வருடத்திற்குள் அந்த தாமதக்கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |